


முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.11.2025) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், 2025ஆம் ஆண்டிற்கான "குழந்தைகள் நலன் – சேவை விருதுகளை" தஞ்சாவூர், அன்னை சத்யா அம்மையார் நினைவு அரசினர் குழந்தைகள் இல்லம், தூத்துக்குடி புனித மரியன்னை கருணை இல்லம், சென்னை, அரசினர் கூர்நோக்கு இல்லம், இராமநாதபுரம், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு ஆகியவற்றிற்கு வழங்கி, விருதுடன் பரிசுத் தொகையாக தலா ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும் வழங்கி சிறப்பித்தார்கள். இந்நிகழ்ச்சியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி.பி.கீதாஜீவன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி.ஜெயஸ்ரீ முரளிதரன், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை இயக்குநர் (மு.கூ.பொ) திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# விவசாயிகள் முதுகில் குத்திய பழனிசாமியின் யோக்கியதையை நாடறியும்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி கண்டனம்!

சென்னை, நவ. 28 -

"விவசாயிகளின் முதுகில் குத்திய பழனிசாமியின் யோக்கியதையை நாடறியும்" என்று அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்கள் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஈரோட்டில் பேசிய முதலமைச்சருக்குப் பதில் சொல்ல முடியாமல், எக்ஸ் தளத்தில் கிறுக்கிக் கொண்டிருக்கும் அடிமை பழனிசாமி, வழக்கம் போலவே உளறிக் கொட்டியிருக்கிறார். ஒன்றிய அரசு விவகாரம் என்றால், கும்பகர்ண தூக்கம் போடும் பழனிசாமிக்கு, தி.மு.க. அரசு என்றால் வீராவேசம் வந்துவிடுகிறது. பழனிசாமிக்கு வீரத்தை ஊட்டுவதே திமுகவின் செயல்பாடுகள்தான்!

நெல்மணிகள் நனைந்து விட்டது என ஸ்பாட்டுக்கு போய் ஓரங்க நாடகம் போட்ட பழனிசாமி, ஒன்றிய அரசு நெல் ஈரப்பத அளவினை 22 சதவிகிதமாக உயர்த்தாததைக் கண்டிக்காமல் எங்கே போனார்?



அ.தி.மு.க. ஆட்சியில் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்ட போது பழனிசாமி எங்கிருந்தார்? மோடி அரசு கொண்டு வந்த விவசாயச் சட்டங்களை ஆதரித்த பழனிசாமி, சாகுபடி, பயிர்க்காப்பீடு பற்றியெல்லாம் பேச அருகதை இருக்கிறதா? கஜா புயலின் போது பயிர்கள் எல்லாம் நாசம் ஆன நேரத்தில், மாமனார் வீட்டு விருந்தில் கொண்டாட்டம் போட்ட பழனிசாமி எல்லாம் விவசாயியா?

நெல் கொள்முதலுக்குரிய ஈரப்பத அளவை உயர்த்தாமல் வஞ்சிப்பது ஒன்றிய பாஜக அரசு. அதை எதிர்த்துக் கேட்கத் திராணியில்லாத, தைரியமில்லாத துரோகி பழனிசாமி வீணாகத் தமிழ்நாடு அரசின் மீதும் தமிழ்நாடு முதலமைச்சர் மீதும் அவதூறை பேசினால் மக்கள் ஏமாந்து விடுவார்களா என்ன?

விவசாயத்தை அழித்து விவசாயிகளை விவசாயத்தை விட்டே அப்புறப்படுத்தும் நோக்கிலான மூன்று வேளாண் சட்டங்களை ஆதரித்து விவசாயி கள் முதுகில் குத்திய பழனிசாமியின் யோக்கியதையை நாடறியும்!

பல்லுயிர்ப் பெருக்கத்தையும் விவசாயத்தையும் அழிக்கும் மதுரை டங்க்ஸ்டன் சுரங்கம் அமைக்கக் காரணமான கனிம வளச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் ஆதரித்து தமிழ்நாட்டுக்குத் துரோகம் செய்த வரலாறு தானே உங்களுடையது.

'மைக்கை, மக்கள் பக்கம் திருப்பி இருந்தால், அவர்களே சொல்லியிருப்பார்கள், இந்த எடப்பாடி பழனிசாமி அவர்களுக்குச் செய்தன என்னவென்று!' எனக் கேட்கிறார். 11 தேர்தல்களில் தொடர்ந்து தோற்கடித்து பழனிசாமிக்கு மக்கள் அளித்த பதில் தெரியவில்லையா?

கோவை, மதுரை மெட்ரோவுக்கு வர வேண்டும் பிரதமர் மோடிக்குக் கடிதம் எழுதியதையே பெரும் சாதனையாகத் தம்பட்டம் அடிக்கிறார் பழனிசாமி. அவர் ஆட்சியில் இருந்த போது அடிக்கல் நாட்டிய மதுரை எய்ம்ஸைக் கொண்டு வரத் திராணி இல்லாத பழனிசாமிதான் வெட்கப்பட வேண்டும்.

டிவியை பார்த்து ஆட்சி நடத்திய கையாலாகாத, நிர்வாகத் திறனற்றவர் என்று இந்தியாவே சிரித்த முதல்வர்தானே பழனிசாமி. கால்கள் மாறுவதையும் கார்கள் மாறுவதையும் வழக்கமாக வைத்திருக்கும் பழனிசாமிக்கு ரோசம் மட்டும் பொத்துக் கொண்டு வருகிறது. ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவை பார்த்துவிட்டு வரும் போது ஏசி காரிலும் 'குப்' என்று வேர்க்கும் அளவுக்கு கர்சீப்பை பயன்படுத்தியதை மறந்துவிட்டீர்களா பழனிசாமி?

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# கழகத்தின் முதல் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.தர்மலிங்கம் 39வது நினைவு நாள்!

## சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி – டாக்டர் எ.வ.வே.கம்பன் பங்கேற்பு!

*திருவண்ணாமலை, நவ. 28 -*

*திருவண்ணாமலையில், கழகத்தின் முதல் நாடாளுமன்ற உறுப்பினரும், கழகத்தின் மூத்த முன்னோடியுமான இரா.தர்மலிங்கம் அவர்களின் 39வது நினைவு நாள் நகர திமுக சார்பில் அனுசரிக்கப்பட்டது. சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, டாக்டர் எ.வ.வே.கம்பன் ஆகியோர் கலந்து கொண்டு நல உதவிகள் வழங்கினர்.*

*24.11.2025 திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு, திருவண்ணாமலை, திருவள்ளுவர் சிலை அருகில், கழகத்தின் முதல் நாடாளுமன்ற உறுப்பினரும், கழகத்தின் மூத்த முன்னோடியுமான இரா. தர்மலிங்கம் அவர்களின் 39வது நினைவு நாள் மாநகர திமுக சார்பில் அனுசரிக்கப்பட்டது.*

*நிகழ்ச்சிக்கு மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் தலைமை வகித்தார்.*

*மாவட்ட பொருளார் எஸ்.பன்னீர்செல்வன், மாவட்ட துணைச் செயலாளர் பிரியா ப. விஜயரங்கன், துணை மேயர் சு.ராஜாங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*நிகழ்ச்சி ஏற்பாடுகளை தினேஷ்சம்பத் செய்திருந்தார்.*

*நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி 500மகளிர்களுக்கு சேலைகளும், கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் 1000பேருக்கு உணவு வழங்கு தலையும் தொடங்கி வைத்தனர்.*

*முன்னதாக இரா.தர்மலிங்கம் அவர்களின் திருவுருவப்படத்திற்கு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, கழக மருத்துவரணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், ப. கார்த்திவேல்மாறன், ப்ரியா விஜயரங்கன் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.*

*நிகழ்ச்சியில் மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி. எம்.நேரு, ஏ.ஏ.ஆறுமுகம், கு.கணேஷ், கற்பகம்சரவணன்,ிற் வழக்கறிஞர் அ. அருள்குமரன், துரை வெங்கட், மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஏ.எம். பாஷா, டி.என்.பி.வினோத்குமார், ராயல் தியாகு, ஆர். வெங்கடேஷ், வேங்கிக்கால் விக்ரம், கல்பனா சம்பத், மீனா விநாயகம், அன்பரசி கிருஷ்ணராஜ், அன்னை பழனி, பேச்சருவி கு.சபரி, ஜி.எச்.ரவிச்சந்திரன், செல்வம் பிரகாஷ், கீழ்நாத்தூர் ராஜேந்திரன், குணாளன், வட்டச் செயலாளர்கள் மா.வினோத்குமார், சி.கே.சசிகுமார், ஜாகீர், பால் தியாகு, மணி (எ) விக்னேஷ், அருண்குமார் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.*



திருப்புவனம் மேற்கு ஒன்றிய திமுக மற்றும் பேரூர் கழக திமுக இளைஞர் அணி சார்பில் துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்த தினத்தை முன்னிட்டு 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு ஒன்றிய செயலாளர் வசந்தி சேங்கைமாறன் தலைமையில். பேரூர் கழகச் செயலாளர் நாகூர்கனி. முன்னிலையில் குளிர்காலத்தை முன்னிட்டு போர்வைகள் மாவட்ட கழக துணைச் செயலாளர் திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன் வழங்கினார். இந்நிகழ்ச்சி ஏற்பாடுகளை. நகர் இளைஞர் அணி அமைப்பாளர் கண்ணன். ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அறிவுகரசு, ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள், காளிதாஸ், கணேஷ் பிரபு, திருப்பதி, முத்துக்குமார், வேல்முருகன், பிரசாத், எஸ்.ஏ.காளிதாஸ், கணேசன், செய்திருந்தார்கள் இந்நிகழ்ச்சியில் பேரூராட்சி துணைத் தலைவர் ரகமத்துல்லாகான், மாவட்டப் பிரதிநிதிகள் ராமலிங்கம், சுப்பையா, ஈஸ்வரன், பாலகிருஷ்ணன், திருநாவுக்கரசு, ஒன்றிய கழக நிர்வாகிகள் ரவி, மகேந்திரன், ராமு, இளங்கோவன், மீனாட்சி சுந்தரம், ராஜ்மோகன், கெங்குராமன், தொண்டரணி ராஜா, மீனவரணி அண்ணாமலை, மாணவரணி அமைப்பாளர்கள் பாண்டியர்கிருஷ்ணன், கிஷோர், கவுன்சிலர்கள், மாரிதாஸ், வேல்பாண்டி, சித்ராதேவி ஆறுமுகம். பத்மாவதி முத்துக்குமார் ஆகியோர் கலந்து கொண்டார்கள். பழையனூரில் ஒன்றிய செயலாளர் சுப்பிரமணியன், தலைமையில் 100க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு போர்வைகள் இனிப்புகள் வழங்கப்பட்டன.

# தமிழ்நாட்டின் அற்புதமான இளம் தலைவர்!



தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு ஆகச்சிறந்த அற்புதமான இளம் தலைவர் கிடைத்து விட்டார்...!

மக்களோடு மக்களாக தினம் தினம் பயணித்து பணியாற்றும் மக்கள் அன்பன்..!

அவரிடம் அவர் சார்ந்திருக்கும் இயக்கத்தின் தலைவர் ஒரு பெரும் பொறுப்பை ஒப்படைக்கின்றார். நம் இயக்கத்திற்கு தமிழ்நாட்டின் ஆகச் சிறந்த இளம் பேச்சாளர்கள் ஒரு நூறு பேரை தட்டித் தட்டிப் பார்த்து தேர்ந்தெடுத்து.... பார்த்துப் பார்த்துப் பட்டை தீட்டி... வெறும் பேச்சாளர்களாக மட்டுமல்லாது, உரை வீச்சாளர்களாக கழகத்திற்கு உங்கள் அணியின் சார்பாக வழங்கிட வேண்டுமென்று கட்டளையிடுகின்றார்..!

நாம் மேலே சொன்ன நம் இளம் தலைவர் அவர்களோ, உடனடியாக களத்தில் இறங்குகிறார். பக்காவான திட்டமிடல் கொஞ்சம் கொஞ்சமாக உருவாகிறது. அது மேலும் மேலும் மெருகேற்றப்பட்டு, மிகத் தெளிவான ஒரு திட்டம் தயாரிக்கப்படுகிறது.

கழகத்தில் ஏற்கனவே பயணிக்கும், அதி தீவிர கொள்கைப் பற்றும், சித்தாந்த தெளிவும், இயக்க வரலாறும் முழுமையாகத் தெரிந்த... நாற்பது பேர் அணியின் தலைமையகத்திற்கு அழைக்கப்படுகின்றார்கள்.

அவர்கள் வருவதற்கு முன்பாகவே, அணியின் சார்பாக தமிழ்நாடு முழுவதும் உள்ள கல்லூரிகளில் இளம் பேச்சாளர்களை உருவாக்கும் திட்டம் பற்றிய விழிப்புணர்வு அறிவிப்புகள் நேரடியாக அணியின் அந்தந்த மாவட்ட செயல்வீரர்களால் நேரடியாகச் சென்று மாணவ மாணவிகளிடம் தெரிவிக்கப்பட்டு.... அவர்களும் ஆன்லைன் மூலமாக விண்ணப்பிக்க துவங்குகின்றனர்..!

அந்த நாற்பது பேர் நடுவர் குழு அணியின் தலைமையகத்தில் அமர்ந்திருக்கும் போது.... இளம் தலைவர் அறிவிக்கின்றார்... இதுவரை 17500 இளைஞர்கள் இந்த பேச்சாளர்கள் தேர்வுக்கு விண்ணப்பித்துள்ளார்கள். இவர்களில் இருந்து ஆகச் சிறந்த நூறு பேரை நாம் தேர்வு செய்து கழக தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற திட்டத்தை அறிவித்து... அதை எப்படி படிப்படியாக நாம் செயல்படுத்தி நிறைவேற்றிட வேண்டும் என்பதையும்... எந்தெந்த அடைப்படையில் பேச்சாளர்களை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதையெல்லாம் மிக ஆழமாக தெளிவுபடுத்துகின்றார்.

அதற்கு அடுத்த அடுத்த இரண்டு வாரங்களில் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகள் என்று மொத்தம் நான்கே நாட்களில், இந்த பதினேழாயிரத்தி ஐநூறு பேரையும் மாவட்டவாரியாக பிரித்து... அவர்களை அந்தந்த மாவட்ட தலைநகரங்களுக்கு பெற்றோருடன் அந்தந்த மாவட்ட இளைஞரணி பொறுப்பாளர்களே அழைத்து வந்து அங்கே நம்ம நடுவர் டீம் போய் ஒவ்வொரு மாவட்டத்திலும் சராசரியாக 25 சிறந்த இளம் பேச்சாளர்களை தேர்ந்தெடுத்து... அடுத்த கட்டமாக மண்டல அளவிலான பேச்சுப் போட்டிகளுக்கு அவர்களை அனுப்ப வேண்டும் என்பது தான் இளம் தலைவரின் திட்டம்..!

ஆனால் கூட்டம் அதிகமாக இருப்பதால் மொத்தமே நான்கு நாட்கள் மட்டுமே இதை நடத்திட வேண்டும் என்பதால்... இந்த நடுவர் குழுவோடு தலைமைக் கழகத்தின் ஆகச் சிறந்த பேச்சாளர்கள் மற்றும் கொள்கை பிடிப்புள்ள பத்திரிகை மற்றும் ஊடகவியலாளர்கள்,ஒரு நாற்பது பேர் இந்தக் குழுவோடு சேர்க்கப்பட்டு

அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு வாரமும் இரண்டு வீக் எண்ட் நாட்கள் என்று இரண்டு வாரத்தில் மொத்தம் நான்கே நாட்களில் 913 இளம் பேச்சாளர்கள் மாவட்ட நிலையில் இருந்து, மண்டல நிலையிலான பேச்சாளர்கள் தேர்வுக்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்..!

யோசித்துப் பாருங்கள் நேயர்களே... வெறும் நான்கே நாட்களில் 17,500 இளைஞர்களில் இருந்து 913 இளைஞர்களை மட்டும் தேர்ந்தெடுப்பது என்பது ஒரு சாதாரண செயலா என்ன?

எவ்வளவு பெரிய நேர்த்தியுடனும், ராணுவ கட்டுப்பாட்டுடனும் இந்த திட்டத்தில் ஈடுபட்ட அத்தனை பேரும் தங்களை உண்மையான விருப்பத்துடனும் ஆவலுடனும் ஈடுபடுத்திக்கொண்டிருக்க வேண்டும் என்பதை உங்கள் யோசனைக்கே விட்டுவிடுகின்றேன்..!

தலைமை நிலையத்திலிருந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனை பேர் பதிவு செய்துள்ளார்கள் என்பதை பிரித்தெடுத்து ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள போட்டியாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப.... மூன்று பேர் கொண்ட ஒரு நடுவர் டீம் எத்தனை தேவைப்படும் என்பதை கணக்கிட்டு அதற்கேற்றார் போல் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தேவையான நடுவர்களை நியமித்து அதை கழகத்தின் அதிகாரப்பூர்வ ஏடான முரசொலியிலும் வெளியிட்டு

அதற்கு முன்னதாக ஒவ்வொரு நடுவரிடம் தொடர்பு கொண்டு, உங்களுக்கு இந்த தேதியில் இந்த ஊருக்குச் சென்று கடமையாற்ற தோதுப்படுமா என்பதையும் உறுதி செய்து கொண்டு.... பிறகு அவர்களுக்குத் தேவையான ஏற்பாடுகளை அந்த மாவட்டத்தில் உள்ள அணி நிர்வாகிகள் மூலம் செய்து கொடுத்து விட்டு

அதை அவர்கள் சரியாகச் செய்கின்றார்களா என்று தலைமை நிலையத்திலிருந்து அடிக்கடி கேட்டு உறுதி செய்து கொண்டு....

இதன் ஊடாகவே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அணித் தலைமையின் சார்பாக ஒரு துணைச் செயலாளரையும் அதே அறிவிப்போடு ஒருங்கிணைப்பாளராக வெளியிட்டு.

அந்த ஒருங்கிணைப்புச் செயலாளர். அந்தந்த மாவட்டங்களின் மாவட்ட அணி அமைப்பாளர்கள் மற்றும் தலைமைக் கழகத்தின் மாவட்ட செயலாளர்களோடு தொடர்புகொண்டு போட்டி நடைபெறும் இடத்தை பார்வையிட்டு அதில் பங்கேற்கும் அனைவருக்கும், அவர்தம் பெற்றோருக்கும் கூட தேவைப்பட்டால் காலை சிற்றுண்டி மற்றும் கட்டாயமாக மதிய உணவுக்கும் ஏற்பாடு செய்து.

ஒவ்வொரு பேச்சாளரையும் மூன்று பேர் கொண்ட ஒரு நடுவர் டீம் தேர்ந்தெடுக்கும் என்று சொன்னோமல்லவா அந்த மூன்று பேரும் தனித்தனியாக தங்களுக்கு வழங்கப்படும் படிவத்தில் அந்த பேச்சாளருக்கு மூன்று தகுதிகள் அடிப்படையில் தனித்தனியாக மதிப்பெண்கள் அளித்து அப்படியாக ஒவ்வொரு டீமும் ஒரு நாளில் 50லிருந்து 75 பேச்சாளர்களை மட்டும் பேச வைத்து தேர்ந்தெடுத்து அன்று மாலையே, ஒவ்வொரு பேச்சாளருக்கும் மூன்று நடுவர்களும் தனித்தனியே அளித்த மதிப்பெண்களைக் கூட்டி சராசரி எடுத்து.... ஒவ்வொரு மாவட்டத்திலும் சராசரியாக டாப் 25 பேச்சாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டனர்!

அந்த மாவட்டத்தில் 400 இளைஞர்கள் போட்டியில் பங்கேற்றால்... அவர்கள் அனைவருக்குமே, ஒரு நல்ல புத்தகம் மற்றும் இளம் தலைவர் கையெழுத்திட்ட சான்றிதழும் வழங்கப்பட்டு மண்டல அளவிலான போட்டிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 20லிருந்து 30 இளைஞர்களுக்கு அனைத்து மாவட்டங்களிலும் தலா 10,000 ரூபாயும் வழங்கப்பட்டது தான் இந்த செயல் திட்டத்தின் உச்சம்!

இப்படியாக இரண்டு வாரத்தில் நான்கே நாட்களில் 913 பேர் 10,000 ரூபாய் பரிசுப் பணத்தோடு மண்டல அளவிலான போட்டிக்கு தயார் நிலையில் இருக்க. அவர்களுக்கு மண்டல போட்டியில் பேசுவதற்கு ஐந்து தலைப்புக்கள் கொடுக்கப்பட்டு அதில் மூன்றை அவர்கள் தேர்வு செய்து, உரையை தயார் செய்துகொள்ள வேண்டும் என்றும்... மண்டல தேர்வில் அமரும் நடுவர்கள், அந்த பேச்சாளர்கள் தயார்நிலையில் வந்திருக்கும் மூன்று தலைப்புக்களில் ஏதேனும் ஒன்றை பேசச் சொன்னால், அதை ஐந்து நிமிடங்களில் பேச வேண்டும். இது தான் விதிமுறை!

இதன் நடுவே ஒவ்வொரு மாவட்டத்திலும் நடைபெற்ற பேச்சுப் போட்டிகளை இயக்கத்தின் அதிகாரப்பூர்வ செய்தி ஊடகமான கலைஞர் செய்திகள் அப்படியே பதிவு செய்து அதை எடிட் செய்து ஒவ்வொரு வாரமும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை ஒரு மணி நேரம் ஒளிபரப்புச் செய்து... அதை பொது மக்கள், கழக உறுப்பினர்கள் மட்டுமல்லாது கழகத் தலைவரும், இளம் தலைவரும் கூட உன்னிப்பாக கவனித்து அதன் பிறகு இளம் தலைவர் தன் அணியினருக்கு கட்டளையிடுகின்றார். இந்த 913 இளைஞர்களும் மண்டல அளவிலான போட்டிக்கு செல்வதற்கு முன்பாக பூமியிலிருந்து வெட்டி எடுத்த வைரக்கல்லாக இருக்கும் இவர்களை நாம் பட்டை தீட்டி ஜொளிக்கும் வைரங்களாக தேர்வுக்கு அனுப்ப வேண்டும். அதில் ஆகச் சிறந்த ஜொளிப்புள்ள வைரங்களை நடுவர்கள் தேர்ந்தெடுக்கட்டும் என்று...!

உடனடியாக அவருடைய தலைமை நிலைய டீம், வெகு வேகமாக களமிறங்குகிறது. மண்டல போட்டிகளை இரண்டு வாரங்கள் தள்ளி வைத்து விட்டு... இடைப்பட்ட காலத்தில் தமிழ்நாட்டை எட்டு மண்டலங்களாக வகைப்படுத்தி, அதில் அந்த 913 பேரையும் சராசரியாக 120 பேர் என்று பிரித்து... அவர்களையும் அவர்கள் பெற்றோருடன், அந்தந்த மண்டலங்களைச் சேர்ந்த அணி நிர்வாகிகள் தங்கள் சொந்த செலவில் வாகன வசதி செய்து கொண்டு வந்து

அவர்கள் அனைவருக்கும் காலை மற்றும் மதிய உணவுகளுக்கும் ஏற்பாடு செய்து... ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஐந்து நடுவர்கள்... அல்ல அல்ல ஐந்து பயிற்சியாளர்களாக ஆக மொத்தம் நாற்பது பேர்களை நியமித்து அதற்கான தேதி, கால அட்டவணைகளை வெளியிட்டு அந்த ஐந்து பேரும், ஒவ்வொரு தலைப்புக்களில் எப்படி பேச வேண்டும் என்று 120 பேருக்கும் பொதுவாக பேசிக் காட்டி விட்டு... பிறகு ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் சராசரியாக 25 போட்டியாளர்களை பிரித்துக் கொடுத்து

அவர்கள் அனைவருக்கும் தனித்தனி அறைகளில் பயிற்சி கொடுக்கப்பட்டு அத்தோடு நின்று விடாமல், அடுத்து நடக்கவிருந்த மண்டல அளவிலான போட்டி நாள் வரையிலும்.

ஒவ்வொரு பயிற்சியாளரும், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அந்த பேச்சாளர்களோடு ஜூம் மீட்டிங் மற்றும் குரூப் சேட் மற்றும் தனித்தனி ஃபோன் உரையாடல்கள் மூலமும் பேசுவதற்கான பயிற்சிகள் ஒவ்வொரு தலைப்பிற்குமான கண்டெண்ட்டுகள் என்று அவர்களுக்கு தேவைப்படும் அத்தனை விவரங்களும் வழங்கப்பட!

இந்த 913 பேரும் முழுமையான தகுதிபெற்றவர்களாக மாற்றப்பட்ட நிலயில் தான்... அவர்கள் மண்டல போட்டிக்கு அழைத்துவரப்பட்டு அவர்களில் இருந்து 24 பேர் கொண்ட நடுவர் குழுவால் சுமார் 182 இளைஞர்கள் ஆகச் சிறந்த பேச்சாளர்களாக வடிகட்டப்பட்டு அவர்கள் அனைவரும் கடந்த வெள்ளிக்கிழமை அவர்களின் ஒரு பெற்றோருடன் சென்னைக்கு அணி நிர்வாகிகளால் அழைத்து வரப்பட்டு... தரமான, பாதுகாப்பான அறைகளில் தங்க வைக்கப்பட்டு... சனிக்கிழமை இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டு ஐந்து நடுவர்கள் கொண்ட ஒரு குழுவால், ஒவ்வொரு பிரிவிலும் டாப் 3 எனப்படும் மூன்று பேச்சாளர்கள் தேர்வு செய்யப்பட்டு... ஆக மொத்தம் இரண்டு பிரிவிலும் 6 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த ஆறு பேர் உரை வீச்சுக்களையும் இளம் தலைவர் உள்ளிட்ட ஒரு சிறப்புக்குழு வினர் பார்த்து, கேட்டு.... அந்த ஆறு பேரிலிருந்து மூன்று ஆகச் சிறந்த இளம் பேச்சாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்!

தலைவர் 100 இளம் பேச்சாளர்கள் தான் கேட்டார். ஆனால் தட்டித் தட்டி தேர்ந்தெடுக்கப்பட்டதோ 182 பேர். இதில் யாரை எடுப்பது? யாரை விடுவது? என்று நடுவர்களால் முடிவு செய்ய இயலவில்லை. அனைவரிடமும் அவ்வளவும் தரம்! விஷயம், இளம் தலைவரிடம் செல்கிறது. அவர் ரொம்ப கூலாக சொல்லிவிட்டார். தலைமை எட்டிபாயச் சொன்னது.... நாம் பதினாறு அடியாக பாய்ந்து விடுவோமே?!

அந்த 182 இளைஞர்களையுமே, இயக்கத்திற்கான இளைஞரணியின் கொடையாக நாம் கொடுத்து விடுவோம் என்று அறிவிக்கின்றார்! அந்த 182 பேருமே... டாப் 3 வெற்றியாளர்களுடன் அடுத்த நாள் அதாவது 27 அக்டோபர் அன்று காலை கழகத்தின் தலைமை நிலையமான அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் வைத்து கழக இளைஞரணிச் செயலாளரும் தமிழ்நாட்டின் ஆகச் சிறந்த இளம் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களால்... கழக தலைவர் திராவிட மாடல் அரசின் நாயகர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டார்கள்!

அந்த மேடையிலேயே கழகத் தலைவர் அத்தனை மாவட்ட செயலாளர்களுக்கும் ஒரு அன்புக் கட்டளையை விடுக்கின்றார். இந்த 182 பேரும் கழகத்தின் எதிர்காலம். இவர்கள் அனைவரையும், உங்கள் மாவட்டங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளில் பேசுவதற்கு முழுமையாக வாய்ப்பளிக்க வேண்டும் என்று..!

அத்தனை பேரின் புகைப்படம் உள்ளிட்ட விலாசம் மற்றும் தொடர்பு எண்களோடு கூடிய சிறு புத்தகமும் தலைவரிடம் இளம் தலைவர் அவர்களால் வழங்கப்பட அது அப்படியே மாவட்டச் செயலாளர்களுக்கும் அனுப்பப்பட்டு விட்டது..!

இவ்ளோ தான் மேட்டர் இதனை.... ஆகச் சிறந்த கொள்கைப் பிடிப்புள்ள நூறு இளம் பேச்சாளர்களை இதனால்... ஏற்கனவே இவருக்கு கொடுக்கப்பட்ட 30 லட்சம் உறுப்பினர் சேர்ப்பு உள்ளிட்ட பல்வேறு கட்டளைகளை சர்வ சாதாரணமாக நிகழ்த்திக் காட்டிய காரணத்தால் இவர்.... உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முடிப்பார்... கண்டிப்பாக திறம்பட செய்து முடிப்பார்

என்று ஆய்ந்து... என்று ஏற்கனவே பல உதாரணங்கள் இருப்பதையெல்லாம் ஆராய்ந்து கணித்து அதனை.... இளம் பேச்சாளர்களை கழகத்திற்கு உருவாக்கும் பணியை

அவன் கண் விடல்...

கழக இளைஞரணிச் செயலாளரிடம் கழக தலைவர் அளித்தார்...!

182 உணர்வு மிக்க கொள்கை பிடிப்புக் கொண்ட இளைஞர்களைக் காட்டி ஆறே மாதத்தில் ஆளுக்கு ஆயிரம் என்று ஒரு லட்சத்தி எண்பத்தி இரண்டாயிரம் கொள்கைப் பிடிப்புள்ள, உணர்வு மிக்க இளைஞர்களை தமிழ்நாடு முழுவதும் உருவாக்கி வைத்துள்ளார் அந்த மாபெரும் இளம் தலைவர்!

இந்த மாபெரும் மக்கள் தலைவர் உருவாக்கி வைத்திருக்கும் இந்த இளைஞர் பட்டாளம் தான் உண்மையாகவே நாளை ஃபாஸிஸத்திற்கு எதிராக விஷம் வைத்த பாயாசத்தை வைக்கப் போகின்றவர்கள்!

தமிழ்நாட்டின் ஆகச் சிறந்த இளம் தலைவரே.. வாழ்க!

**சௌமியன் வைத்தியநாதன்**

*கழக இலக்கிய அணி துணைச் செயலாளர்*